தமிழர் நேசன்

(தமிழர் கல்விச்சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு — திருக்குறள்.

தொகுதி V. } துர்மதி௵ பங்குனிமீ } பகுதி 12.

பாச வினம்
The Mosses

சென்னைக் கிறிஸ்தவன் கலாசாலையில் உயிர்நூல் ஆசிரியரா யிருக்கும் ஸ்ரீமான் M. S. ஸபேச ஐயர், M. A. எழுதியது.

தோன்றுமிடமும் பொதுக் குணங்களும்:—மழைபெய்து ஒய்ந்த சில நாட்களுக் கெல்லாம் சுவர்களின் இடுக்குகளிலும் வெயிலால் காயப்படாது மரங்களால் மறைக்கப்பட்டிருக்கும் தரைகளிலும், மிகப் பசுமையான சிறிய செடிகள் நெருக்க மாய்த் தோன்றுவதை யாவரும் பார்த்திருக்கலாம். இவை கள்தான் பாசமெனும் செடிகள். நீர்ப்பாசிகள், பூஞ்சக் காளான், போன்ற செடிகள் போலல்லாது, பாசங்கள், சிறியன வாயினும் நிமிர்ந்து வளர்வதுடன் அங்கவிரிவுகளையும் காண் பிப்பனவாகும். பாசங்கள் தோன்றும் தரையைப் பார்த்தால், ஒரு பச்சைப் போர்வையை விரித்தது போன்ற தோற்றம் ஏற்படும். பாசங்கள் அழகிய சிறிய செடிகள். சிலவகைப்பாச ங்கள் சதுப்பு நிலத்திலும், சில பாறைகளிலும் தோன்று

கின்றன. ஈரப்புள்ள வரையில் பாசங்கள் செழித்திருப்பன. ஈரையுலர்ந்த பின் பாசங்கள் காய்ந்துபோம். அப்போது இறந்தாற்போன்று காணப்படும். உண்மையில் இப்பாசங்கள் இறக்கவில்லை. சொற்ப மழை பெய்தாலும் உடனே இவைகள் பசுமை நிறத்துடன் வளர ஆரம்பிக்கின்றன. இவ்விதமாய்க் காய்ந்தாலும் இறவாது உயிரை வைத்திருந்து பிற்பாடு மழை பெய்யுங்கால் வளர்வது பாசங்கள்போன்ற சில அற்ப செடிகளினிடமே காணலாம்.



படம் 1.
தோற்றமும் அங்கங்களும்

சித்திரம் (1) பாசக்கொத்து (2) i, ii பெண்ணுறுப்பு (3) i, ii, iii ஆணுறுப்பு (4) வாழ்க்கைச் சக்கிரம்.

உடலினமைப்பு:—சுவரின் இடுக்கினின்றும் சிறு துண்டைக் கிள்ளியெடுத்துக் கொத்தாய்த் தோன்றும் பாசங்களைக் கவனிக்கவும். (படம் 1 சித்திரம் 1 நன்றாய் வளர்ந்திருக்கும் பாச மொன்றை உற்று நோக்கின் முதலாக அதினடியில் சிறிய தண்டு இருப்பது தெரியவரும். (படம் 2 சித்திரம் 1) இத்தண்டு மிகவும் சன்னமானது. கடினமான பாகம் இத்தண்டிலாவது வேறெந்த அங்கத்திலாவது கிடையாது. தண்டின் கீழ்ப்பாகத்திலிருந்து சில சிறிய சிலும்புகள்

தோன்றி சுவரினுள்ளோ, பூமியிலோ, நுழைந்து செடியை நிலை நிறுத்துகின்றன. இச் சிலும்புகள் கடினமாயிருக்க வில்லை. மிகவும் நுட்பமாயும் மயிர்போன்று சன்னமாயு மிருப்பன. சிலும்புகள் வெளுப்பாகவோ துரு நிறமாகவோ காணப்படும். உயர்தரச் செடிகளிற்கு வேர்கள் எவ்வித முதவுகின்றனவோ, அவ்வாறே பாசங்களுக்கும் மயிர்போன்ற சிலும்புகள் உதவுகின்றன. செடியினை நிலை நிறுத்தவும் தண்ணீரையும் உப்புகளையும் தரையிலிருந்து உறிஞ்சவும் சிலும்புகள் ஏற்பட்டிருக்கின்றன. முக்கிய தொழில்களைச் செய்து வந்தபோதிலும் பார்ப்பதற்கு இச்சிலும்புகள் அற்பமாக இருக்கின்றன. தண்டின் மேற்பாகத்தில் சிறிய பசுமையான இலைகள் அங்கு மிங்கும் தோன்றுகின்றன. ஆனால் தண்டின் நுனியில் பெரும்பாலும் இலைகள் அடர்ந்து கொத்தாய் அடுக்கப்பட்டிருக்கின்றன. (படம் 1 சித்திரம் 1). இலைக்காம்பில்லை யாதலால், இலைப்பரப்பு அகன்ற அடிப்பாகத்தால் தண்டுடன் சேர்ந்திருக்கிறது. வென்மையாயும் தட்டையாயும் மிருக்கிறது. செடிகளின் இளம்பருவத்தில், மேலே கூறிய அங்கங்களே கண்ணுக்குப் புலப்படக்கூடியவைகள். சந்ததி யுண்டுபண்ணும் அங்கங்கள் தண்டின் நுனியில், இலைக்கொத்தின் மத்தியில் பருவகாலத்தில் தோன்றுகின்றன. (படம் 1 சித்திரம் 2 i & 3 i) இவ்வங்கங்கள் பூதக்கண்ணாடியின் கீழ்ப் பார்த்தால் தெரியவரும். இவைகளைப்பற்றி பிற்பாடு சொல்லுவோம். சில பாசங்களின் தண்டு பல சிறிய கிளைகளோடு கூடியும் வளரும்.

உணவு அடையும் விதம்:—தரையினின்றும் சிலும்புகள் வேர்போல் உணவுப் பொருள்களாகிய நீரையும் உப்புகளையும் உறிஞ்சுகின்றன. இவை தண்டால் மேலே இலைகளினிடம் சோக்கப்படுகின்றன. இலைகள் பசுமையாயிருப்

பதால் மாத்துள் உண்டுபண்ணக்கூடும். உணவைத் தயார் செய்வதில், பாசங்கள், பாசிகள் பூக்களுடைய செடிகள், மூன்றும் ஒத்திருக்கின்றன.

சந்ததி யுண்டுபண்ணும் விதம்:—பருவ காலத்தில் இலைக ளோடுகூடிய செடிகள் சந்ததி யுண்டுபண்ணுவதற்கான ஆண் பெண்ணென்று வேறுபட்டுள்ள உறுப்புக்களைத் தாங்கு கின்றன. இவ்வுறுப்புக்கள் நுட்பமாயிருப்பதால் பூதக் கண் ணாடியின் உதவியால் அவற்றை அறியவேண்டும். இலைகள்,



படம் 2.

கருவிலைக்கியமான பின் பாசத்தின் தோற்றம்.

சித்திரம் (1) பாசம் நுனியில் காம்போடுகூடிய கொண்டை யைத் தாங்குதல் (2 i & ii) கொண்டையின் வெட்டுத் தோற்றம் (3) சந்ததித்தூள் (4 i & ii) சந்ததித்தூள் வளர்ச்சி ஆரம்பம் (5) பாசச்செடி குருத்துகளினின்றும் தோன்றுதல்.

நுனியில் அடர்ந்திருப்பதால், சந்ததி யுறுப்புகளைப் பாது காப்பனவாகும். ஒரே செடியில் ஆணுறுப்போ, பெண் ணுறுப்போ இருப்பது வழக்கம். சில செடிகளில் இரண்டு உறுப்புகளும் தனித் தனிக் கிளைகளில் தோன்றக்கூடும்.

ஒரு பாசத்தின் நுனியைப் பூதக் கண்ணாடியின் கீழ்ப் பார்ப்போம் (படம் 1 சித்திரம் 2 i and ii) சில இலைகள் வெளிப்புறத்தே காட்டப் பட்டிருக்கின்றன. இவைகளி னுள்ளே தண்டின் நுனியில் மூன்று விநோத வடிவமுள்ள அங்கங்களிருக்கின்றன. இவைகள் சிறிதும் பெரிதுமா யிருப்பன. இவைகளி லொன்றைத் தனியே படம் 1 சித் திரம் 2 ii காட்டியிருக்கிறோம். இதுதான் பெண்ணுறுப்பு. ஏனெனில் இதினுள்ளே கரு உண்டாகிறது. இப்பெண் ணுறுப்பு பிளாஸ்க் (Flask) போன்று காணப்படுகிறது. அகன்ற அடிப்பாகமும் நீண்டு குறுகிய கழுத்தும் உடை யது. அடிப்பாகம் தண்டினை யொட்டியிருக்கிறது. அகன்ற அடிப்பாகத்தினுள்ளே கரு ஜீவாதார வஸ்துவுடன் தோன்று கிறது. அடிப்பாகமும் கழுத்துப் பக்கத்துச் சதையி னின்றும் சுவரால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதிர்மை யடையாதபோது பெண்ணுறுப்பின் கழுத்தின் நுனி மூடப்பட்டிருக்கிறது. பாசங்கள், ஈரப்பான இடத்தில் தோன்றுமென முன்பே சொல்லியிருக்கிறோம். அவைகள் உள்ள இடத்தில் நீர்த்துளிகள் பல இருப்பன. கரு, செடி யின் நுனியில், இலைகளால் மறைக்கப் பட்டிருப்பினும், பெண்ணுறுப்பின் கழுத்து, வெகுவாய் நீண்டு வெளிப் புறம் புதுங்கி யிருக்கின்றது. முதிர்ந்த பருவமடையுங் காலத்து கழுத்தின் நுனி பிரியவும் அதினின்றும் ஒரு வகை ரசத்துளிகள் வெளியே பொசிகின்றன. இச்சமயம், கருவிலைக்கியம் சேருவதற்குரிய பக்குவத்தை, கரு, அடைந்த தாகக் கொள்ளவேண்டும். பாசங்கள் கூட்டம் கூட்டமாய் வாழ்வன வென்று சொன்னோமல்லவா. சில . ஆண் செடி கள் பெண் செடிகளின் பக்கத்தே யிருத்தல்கூடும். ஆணு றுப்பு அங்கங்களுடைய தண்டின் நுனியிலேயே தோன்று

கின்றன (படம் 1 சித்திரம் 3 i, ii, iii). படம் 1 சித்திரம் 3-ல் ஆணுறுப்புகள் காட்டப்பட்டிருக் கின்றன. வெளியில் இரண்டிலைகள் காட்டியிருக்கிறோம். மத்தியில் நான்கு ஆணுறுப்புகள் காட்டியிருக்கிறோம். ஆணுறுப்பு சிறிய காம்பால் தண்டின் நுனியில் சேர்க்கப் பட்டிருக்கிறது. பார்வையில் கோழிமுட்டை போன்றிருக் கிறது. ஒரு உறுப்பு தனியே 3 ii ல் காட்டப்பட்டிருக் கிறது. இதில் வெளிப்புறம் ஒருசுவர், உள்ளே அநேகம் சிறிய ஜீவாதார வஸ்துவோடுகூடிய அறைகளை, மூடியிருக் கிறது. ஒவ்வொரு அறையிலும், ஜீவாதாரவஸ்து, சில சிறிய தூள்களாகப்பிரிய ஆரம்பிக்கிறது. முதிர் வடையுங் காலத்தில் ஆணுறுப்பு நுனியில் கிழிபடவே அறைகள் வெளியே வருகின்றன உடனே ஒவ்வொரு அறையிலுள்ள சிறிய தூள்கள் இரண்டு துய்களுடன் வெளியே வருகின்றன. இவைகள் பாசங்களின் நடுவில் தங்கியிருக்கும் நீர்த்துளி களை அடையவும் அங்குமிங்கும் துய்களின் ஊக்கத்தால் உலாவுகின்றன. இவை ஆணம்சத்தூள் (படம் 1 சித்திரம் 3 iii). சற்றுநேரத்திற் கெல்லாம், பக்கத்திலேயிருக் கும் பெண்ணுறுப்பின் நுனியினின்றும் பொசியும் ரசத்தால் இழுக்கப்படுவதால் எல்லா ஆணம்சத் தூள்களும், பெண்ணு றுப்பை நோக்கிச்சென்று அதன் நுனியண்டை சுழலுகின் றன (படம் 1 சித்திரம் 2 ii). கடைசியாக, ஒரு ஆணம்சத் தூள் பெண்ணுறுப்பின் கழுத்தினுள்ளே நுழைந்து, கரு வினையடைந்து, துய்களை நீக்கிவிட்டு, கருவோடு கலக்கிறது. கருவிலைக்கியம் நேர்ந்ததும், மற்றைய ஆணம்சத்தூள்கள் உள்ளே செல்வதில்லை. சாதாரணமாக ஒரு செடியின் நுனி யிலுள்ள பல பெண் உறுப்புகளுள் ஏதேனுமொன்றில் கரு விலைக்கியம் நேர்ந்தவுடன் மற்றைய உறுப்புகள் காய்ந்து

விடுகின்றன. கரு, ஆணம்சத்தாளுடன் கலந்தவுடன், பிண்டமாக மாறுபடுகிறது. இதில் ஜீவாதாரவஸ்து நிறைந்திருக்கிறது. இந்த ஜீவாதாரவஸ்து, ஒரு உறையை முதலாக வெளியே தோன்றச்செய்கிறது. பிண்டம் ஆரம்பத்தில் பெண்ணுறுப்பினுள்ளே அடிப்பாகத்தில் தங்கியிருக்கிறது. பெண்ணுறுப்பின் நுனியான கழுத்தும் உதிராது மேலே நீட்டிக்கொண்டே யிருக்கிறது. இந்தப்பிண்டம் அடுத்தடுத்துப்பிளவுபட்டு பலஅறைகளையுடைய தனிஉறுப்பாய்ப் பெருக்கிறது. சிலநாளைக் கெல்லாம் இந்தப்பிண்டம் ஜீவாதாரவஸ்துவின் முயற்சியால், ஒருசிறிய காம்போடுகூடிய கொண்டையாய் மாறுபடுகிறது. காம்பு, கொண்டையை, பெண்ணுறுப்பின் அடிப்பாகத்துடனும் பாசத்தினுடைய தண்டின் நுனியுடனும் சேர்க்கிறது. இந்தக்காம்பு திடீரென்று நீள ஆரம்பிக்கவும், பெண்ணுறுப்பின் கழுத்துப் பாகம் தெறிக்கிறது. கொண்டையும் வெளியே எடுக்கப் படுகிறது. தெறித்த கழுத்துப்பாகம், கீழேவிழாது கொண்டையின் பேரில் ஒரு குல்லாப்போல் கவிந்துளது (படம் 2 சித்திரம் 1). காம்போடுகூடிய கொண்டை, கருவிலேக்கியம் நேர்ந்த பின்னரே, தோன்றக் கூடியதாகும். கொண்டையானது, பிண்டம் காளடைவில் வளர்வதால் உண்டாவது. இவ்வளர்ச்சிக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், பாசத்தினிடமிருந்து பெரும்பாலும் எடுக்கப் படுகின்றன. கொண்டையும், சில அறைகளில் பசுமை நிறத்தாள்களை யுடையதாய்க் காணப்படுவதால், பாசத்தினின்றும் கிடைத்த நீரைக்கொண்டும், ஆகாயத்திலுள்ள கரிமல வாயுவைக் கொண்டும் மரத்தாள்கள் தயார்செய்யக் கூடியதாகும். கரு விலேக்கியத்தால் நேர்ந்த பிண்டம், இலேகளோடுகூடிய பாசமாக நேரே மாறுபடாமல் காம்போடுகூடிய கொண்டை

போன்ற ஒரு கனியாகவல்லவோ மாறுபட்டது. இதினின்றும் பாசமாகிய செடி எவ்வாறு தோன்றுகிறதென நாம் அறிய விரும்புவோம். கொண்டையின் நீளக் குறுக்கு வெட்டுத் தோற்றங்களைக் காட்டியிருக்கிறோம் (படம் 2 சித்திரம் 2 i & ii). இச்சித்திரங்களில், வெளியே சுவரும், நடுவிலும் சுவரின் பக்கத்திலும் சதைப் பாகமும் தெரிகின்றன. சுவரினையடுத்து உள்ளே காலியிடங்கள் உள. அவைகளில் அங்கு மிங்கும் பரவியிருக்கும் சில நூல்கள் காணப்படும். அந்நூல்களில் பசுநிறத் தூள்களிருப்பதாலேயே, கொண்டை, பாசத்தின் தண்டையொட்டி நின்று சில பொருள்களை அதினின்றும் எடுத்த போதிலும், தானாகவே மரத்தூள்களை யுண்டுபண்ணி பெரிதாய் வளரக்கூடியதாகிறது. நடுவாகச் சதையின் பக்கத்தில் வெளிப்புறத்தில் பல தூள்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இத்தூள் ஏராளமாய் அங்கேயுள்ள பல சிறிய அறைகளினிடமிருந்து தோன்றுகின்றது. இத்தூள்கள் நுட்பமானவைகள். இவைகள் சந்ததித் தூள்கள். ஒரு பிண்டத்தின் மாறுபாட்டாலுண்டாகிய கொண்டை ஆயிரக் கணக்கான தூள்களை உள்ளே உண்டுபண்ணுகிறது. கொண்டையின் மேற்பாகம் மூடிபோன்று இருக்கும். இப்பாகம் விண்டுவிடவே சந்ததித் தூள்கள் வெளியேவருகின்றன. (படம் 2 சித்திரம் 3). சந்ததித் தூள்கள் உருண்டையாயும், துருநிறமாயும், துய்களன்றியும் இருப்பன. இவைகள், காற்றால் வெகுதூர மெடுக்கப்படும். நைப்புள இடத்தில் தங்குமானால், சந்ததித் தூளிலுள்ள ஜீவாதாரவஸ்து முயற்செய்ய ஆரம்பிக்கிறது. மேலுறை கிழிபடுகிறது. உள்ளுறை ஜீவாதாரவஸ்துவுடன் வெளியே நீண்டு, சில அறைகளோடு கூடிய சிறிய நூலாகத் தோன்றுகிறது. பிற்

பாடு பல அறைகள் நேரிலும் பக்கத்திலும் உண்டாகவே பல கிளைகளோடு கூடிய நூல் தொகுதியாய், சந்ததித்தூள் வளர்வதைக் காண்கிறோம். இந்நூல் தொகுதியினின்றும் ஆங்காங்கு சிறிய சிலும்புகள் கீழே தோன்றி நூல் தொகுதியைத் தரையோடு ஒட்டியிருக்கச் செய்கின்றன. நூல் தொகுதியைக் கவனித்துப் பார்த்தால் பல சிறிய குருத்துக்கள் காணப்படும். சில குருத்துகள் இளம் பாசச் செடியாக வளர்வதையும் பார்க்கலாம். இக் குருத்து ஒவ்வொன்றும் இலைகளோடு கூடிய பாசமாக வளர்கிறது.

ஆகவே, பாசச் செடிகள் ஆண் பெண்ணென வேறுபட்ட அங்கங்கள் பலவற்றை முதலில் தாங்குகின்றன. தண்டின் நுனியில் உள பல பெண்ணுறுப்புகளில் ஒன்றில் கருவிலேக்கியம் நேர்வதாகக் கொள்வோம். இதின் பயனாய் ஒரு பிண்ட முண்டாகிறது. பிண்டம் காம்போடு கூடிய கொண்டையாய் வளர்கிறது. ஒவ்வொரு கொண்டையிலும் ஆயிரக் கணக்கான சந்ததித் தூள்கள் உண்டாகின்றன. ஒவ்வொரு தூளும் பல குருத்துகளோடு கூடிய நூல் தொகுதியாய் மாறுபடுகிறது. ஒவ்வொரு குருத்தும் ஒரு பாசச் செடியாய் வளரக் கூடுமாதலால் ஒரு சந்ததித் தூளிலிருந்து நெருங்கிய பாசக் கொத்து ஏற்படும். கவனிப்போமேயானால் கருவிலேக்கியம் நேர்ந்ததின் பயனாகக் கடைசியில் அநேகம் பாசக் கொத்துகள் உண்டாவதாகும். பாசத்தின் வாழ்க்கை ஒரு சக்கிரம்போலும். பாசத்தின் வாழ்க்கைச் சக்கிரத்தைப் படரூபமாகக் காட்டியிருக்கிறோம் (படம் 1 சித்திரம் 4).

நீர்ப்பாசிகள் நீரிலேயே வாழ்நாளைக் கழிப்பனவாதலால், அவைகளின் சந்ததித்தூள்கள் உலாவக்கூடியதாய்க் காணப்படுகின்றன. வேண்டிய இடத்தைத்தேடி அடைவதற்கு

சந்ததித்தூள்கள் உலாவுவது அவசியமாகும். பாசங்களோ தரையில் வாழ்வனவாகும். கருவிலைக்கியம் நேர்வதற்கு மாத்திரம் நீர்த்துளிகள் வேண்டுவதாகும். கருவிலைக்கியத்தால் உண்டான கொண்டை சிறிது காலம் சும்மாவிருந்து வளர்ச்சிக்கு சௌகரிய மேற்படுங்கால் பிளக்க ஆரம்பிக்கிறது. அதிலுள்ள தூள்கள் காற்றாலே எடுக்கப்படுவதால் துய்கள் வேண்டியதில்லை. பாசிகளிற்போல பாசத்திலும் சந்ததி ஏராளமாய்த் தோன்றுவதாகும். காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ற மாறுபாடுகள் செடிகளில் பல அங்கங்களில் தோன்றுதல் புதுமையே. பாசங்களை பாசியினம், நாய்க்குடையினம் இவை யிரண்டிற்கும் மேற்பட்டதெனக் கொள்ளலாம்.

மந்திரவாதிகளின் மாய வித்தைகள்
The Miracles of Magicians

5. வானின்று மீன் பிடித்தல்
5. Catching Fish from the Air

ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர், B.A., B.L.,
தொகுத்தெழுதியது.

(தொடர்ச்சி)

முந்திய நான்கு வித்தைகளையும் ஆராய்ச்சி செய்த ஐரோப்பிய சாஸ்திரியைப் போலவே இவ் வதிசய விஷயங்களைக் கண்ணுற்ற வேறு சிலரும் இவற்றை ஆராய முயன்றிருக்கின்றனர். அவர்களுள் நமது நாட்டினரான ஸரத் கோஷ் என்பவர் ஒருவர். அவர், பொதுவாக நமது நாட்டில் காட்டப்படும் மாயவித்தைகளைப் பற்றியும், குறிப்பாகத் தலைப்பில் கூறப்பட்ட வித்தையைப் பற்றியும் ஸையன்டிபிக் அமெரிகன் என்று அமெரிகா தேசத்தில் பிரசுரமாகும் பத்திரிகையொன்றில் சற்றேறக்குறையக் கீழ் வருமாறு எழுதியிருக்கிறார்.

இந்து வித்தைகாட்டிகளின் சாமர்த்தியத்தைப் பற்றி அநேகம் கதைகள் உண்டு. அவர்கள் காட்டும் விந்தையான வித்தைகள் இன்ன இன்னவாறு செய்யப்படுகின்றன என்று கூறுவாரும் பலர் உண்டு. அவர் தாம் கண்டு பிடித்ததாக எடுத்துக் கூறும் முறைகளும் அவ்வாறே பலவகைப்படுகின்றன. நமது வித்தைகாட்டிகளின் கீர்த்தி எவ்வளவு தூரம்

நியாயமான தென்பதை நாம் இங்கு ஆராயவேண்டியதில்லை. அவர்கள் மிகவும் ஆச்சரியமாயும் விநோதமாயுமுள்ள பல வித்தைகளைக் காட்டிவருகிறார்கள் என்பது நிச்சயம். இவற்றுள் பலவற்றுக்குத் துணையாளரின் உதவியும் முன்னமே தயார்செய்து வைத்திருக்கும் துணைக்கருவிகளின் உதவியும், வித்தை காட்டியின் கைப் பயிற்சியுமே இன்றியமையாதன. இவற்றைப் பொதுவாக மேனாட்டு வித்தைகளுக்கு ஒப்பிடலாம்' "கையைக் கண் தொடராது" என்பதே இவை எவ்வாறு செய்யப்படுகின்றன என்பதை விளக்கும்.

இவர் செய்துவரும் வேறு சில வித்தைகள் தேவதைகளின் உதவியால்தான் செய்யப்படுகின்றன என்று இவர் கூறுகின்றனர். எவ்வளவு நுண்ணிய ஆராய்ச்சி செய்து பார்த்தும் அவற்றில் யாதொரு விதமான ஏமாற்றமும் காணப்படாமையால் நாம் இவர் சொல்லுவது உண்மையோ என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. அப்படிக்கில்லாவிடில் வசிய சக்தியினால் இவர்கள் பார்ப்போரை மயக்கித் தாம் மனத்தால் நினைப்பனவற்றை அவர் கண்ணுக்குத் தோற்றச் செய்கின்றனர் என்பதையாவது ஒப்புக்கொள்ளவேண்டும். நாம் இங்கு விளக்க முயலும் வித்தையானது சிறப்புவாய்ந்த இந்தத் தனிவகுப்பில் சேர்ந்ததல்ல. இது வெறும் கலப்பில்லா ஏமாற்றமே தவிர, வேறில்லை.

பார்ப்போனது புலன்களையும் அறிவையும் ஏமாற்றுவது கடினமான காரியமல்ல. பொதுவாக, வேடிக்கை பார்க்கும் ஒருவன் வித்தைகாட்டி படிப் படியாகச் செய்யும் காரியங்களைக் கவனித்து வந்தால் வித்தை செய்யும் விதம் இதுதானென்று கண்டு பிடித்து விடலாமென்று எண்ணுகிறான். அது சரிதான்: ஆனால் வித்தைகாட்டி செய்யும் பல காரியங்களினிடையில் இவை இந்த வித்தைக்கு உரியன, இன்றி

யமையாதன என்பதும், இவை அநாவசியமானவை, எடுத்த வித்தைக்கு உரியனவல்ல என்பதும் அவனுக்குத் தெரியாது. ஒரே வித்தையைப் பல தடவைகளில் பார்த்திருந்தாலொழிய செய்யப்படும் சில காரியங்கள் ஒரே ஒழுங்காகச் செய்யப் படுகின்றனவா அல்லவா, அவற்றுள் எவை வித்தைக்கு இன்றியமையாதன, எவை நமக்கு வீண் காரியங்களாகத் தோற்றினும் மெய்யாக வித்தைகாட்டிக்குப் பயன்படுகின்றன என்பது ஒன்றும் அவனுக்குத் தெரியாது. ஆதலால் அவன் போதிய அறிவில்லாமையால் மயங்கி ஏமாறுகிறான். வித்தையின் நுட்பம் இதுதான் என்று எடுத்துக் கூறினால் மட்டும் இவ்வளவுதானா என்று தோன்றுகிறது.

நாம் இங்கு எடுத்துக்கூறும் வித்தையானது வித்தை காட்டி ஆரம்பித்துக் கால்மணி நேரத்துக்குள்ளாகவே செய்யப்பட்டுவரும். முதலில் ஏதாவது ஒன்றிரண்டு செப்பிடு வித்தைகளைக் காட்டியானபின் இந்த வித்தை செய்யப்படுகிறது. இந்த வித்தை இவ்வாறு காட்டபபடுவதை இரண்டு மூன்று தடவை கண்ணுற்ற பின்னும் கூட இநத வித்தை ஆரம்பித்து வெகு சீக்கிரமாகக் காட்டப்படவேண்டியது என்பதை அறிந்து கொள்ளுவது எளிதல்ல. ஏனென்பது வித்தை இவ்வாறு காட்டப்படுகிற தென்பதை அறிந்துகொண்டால் உடனே விளங்கும்.

ஏதாவது சாதாரண வித்தைகள் ஒன்றிரண்டு காட்டியானதும் வித்தைகாட்டியின் ஆள் ஒரு தூண்டிலை எடுத்துக் கொண்டுவந்து அவனது கையிற் கொடுக்கிறான். சாதாரணமான ஒவ்வொரு தூண்டிலையும் போலவே இதிலும் ஒரு கொக்கியும் ஒரு மிதப்பும் இருக்கிறது. ஒரு சாண் நீளமும் நாலுவிரல் அகலமும் இருக்கும் மிதபபைச் சற்று பெரிதென்று தான் கூறவேண்டும். அது கொக்கியிலிருந்து நாலடி

தூரத்தில் கட்டப்பட்டிருக்கிறது. தூண்டிற் கயிற்றில் சிறு வளையங்கள் பல காணப்படுகின்றன. அவற்றின் வழி தூண்டிற் கம்பிலிருந்து மிதப்புவரை இன்னொரு சிறு கயிறு ஓடுகிறது.

வித்தைகாட்டி தூண்டிற் கம்பைக் கையிலேந்தித் தூண்டிலைக் காற்றில் வீசிச் சுழற்றிச் சுண்டுகிறான். மீனை ஆகாசத்திலிருந்து பிடிக்கப் போவதாகக் கூறுகிறான். சுற்றியிருக்கும் ஜனங்களனைவரும் தூண்டிலின் கொக்கியைப் பார்த்த வண்ணமாகவே இருக்கின்றனர். இதனிடையில் வித்தை காட்டியின் ஆள் ஒரு அகலப் பாத்திரத்தில் நிறையத் தண்ணீர் கொணர்ந்து ஆயத்தமாக வைக்கிறான் சிறிது நேரம் ஆரவாரம் செய்து, தேவதைகளை அழைத்து, தனது கீர்த்தியை எடுத்துப் பேசிப் போதுபோக்கிய பின், வித்தை காட்டி திடீரெனத் தூண்டிலை ஒரு சுண்டுச் சுண்டுகிறான். கொக்கிப் புறத்தில் பளபள வென்று மின்னும் மீனொன்று காணப்படுகிறது. உடனே வித்தை காட்டி கொக்கி நுனியைத் தண்ணீரில் வைக்கிறான். மீனும் இங்கு மங்கும் நீந்துகிறது உடனே வித்தை காட்டியின் ஆள் கொக்கியினின்றும் மீனை விடுவித்து அதைத் தண்ணீருள் விட்டு விட்டு, தூண்டிலை வாங்கி மடித்து பத்திரப்படுத்துகிறான். பிறகு தண்ணீர்த் தொட்டியை எடுத்து ஒவ்வொருவராகப் பாருங்களென்று காட்டுகிறான். அதில் ஏமாற்றமில்லை: நிஜ மீன் தான்.

இந்த வித்தையில் அதிக சாமர்த்தியம் ஒன்றும இல்லை. மீன் மிதப்புக்குள் வைக்கப்பட்டிருந்து, வெளியில் வந்தது. மிதப்புக்குள் சிறிது ஈரமுள்ள துணியோ அல்லது ஸ்பஞ்சு (Sponge) போன்ற ஈரத்தைக் காபபாற்றிவைக்க வல்ல வேறு ஏதாவதொரு பொருளோ வைக்கப் பட்டிருந்தது. அதன் வழிதான் மீன் மூச்சு விட்டுக் கொண்டிருந்தது

மீனும் நல்ல வலுத்த ஜாதி. தண்ணீரில்லாமல் சற்றேறக் குறைய அரைமணி நேரம் ஈரமான இடத்தில் உயிரோ டிருக்கவல்லது. வளையங்களின் வழி கோக்கப்பட்ட கயிறு, மிதப்பின் அடிப் புறத்தைத் திறக்கக் கூடிய கயிறு. அதை இழுத்து விட்டதும் மிதப்பின் அடிப்புறம் திறந்தது: மீன் வெளி வந்தது. கொக்கியின் வரை சரியாய்ப் போய் நிற்கும் படி அளவுபார்த்துக் கயிறு கட்டியிருப்பதால் மீன் கொக் கியினண்டை வந்து சேர்ந்தது. தூரவிருந்து பார்ப்போருக்கு மீன் கொக்கியில் மாட்டியிருப்பதாகத் தோன்றுமே யல்லாது அதனண்டையில் இருப்பதாகத் தோன்றாது. அதனால் தான் அவ்வளவு சீக்கிரம் வித்தை காட்டியின் ஆள் தூண்டிலி லிருந்து மீனை விடுவித்துத் தூண்டிலை வாங்கி உள்ளே வைத்துக் கொள்ளுவது.

வெகு எளிதான வித்தை, ஆனால் சிறிது தவறினால் சாயம் வெளுத்துவிடும். ஏமாற்றம் இன்ன விடத்தில் என்பது வெளியாகாது எல்லாரும் அதிசயிக்கும்படி வித்தையைக் காட்டிவருவது தான் வித்தை காட்டியின் சாமர்த்தியம்.

தில்லைக் கோவிந்தன்,
Thillai Govindan.

பதினேழாவது அதிகாரம்.

அதிருப்தியேற்பட்ட விதத்தை விவரிப்பது.

இப்படியாக, காலக்கிரமத்தில் படிப்படியாய் உலக அனுபவம்பெற்று, பூமியில் இருப்பவரில் ஒருவன் என்று மட்டும் பற்று அற்று இராமல் உலகவழக்கங்களுடன் ஒட்டி வாழ்ந்து, அற்பசுகங்களிலும் சிறு வெற்றிகளிலும் ஆசை வைத்து, நான் பழகிவந்த சிறிய ஊரின் கூக்குரலையே, உலகத்தின் பேரிரைச்சல் என்று கொண்டு, அடிக்கடி ஏமாந்து, உலகவாழ்க்கையின் மேலான தாத்பரியத்தையும் உந்நத உத்தேசங்களையும் ஒரு பொருட்டாக்காமல், யாதொரு சிரமமும் மேற்கொள்ளாமல் சுகமாய்வாழ்ந்து வந்தேன். நான் போற்றிவரும் புஸ்தகங்களில் ஒன்றில், "மரணம என்பது கதவோ சுவரோ, உயிரின் ஆரம்பமோ முடிவோ, நாம் சொல்லமுடியாது; அதை நாமறியோம்" என்று கூறப்பட்டிருக்கின்றது. என் அபிப்பிராயமும் அதுவே. ஒரு பக்ஷம் தீர்மானம் பண்ணவேண்டுமென்றால், எனக்குத் தோன்றுவது: "சாவு சுவர்போன்றதாகவே யிருக்கவேண்டும்; வாழ்க்கையின் முடிவாகவல்லாமல் வேறு ஏதாக இருக்கக்கூடும்?" என்பது தான். வாஸ்தவத்தில் என்னுடைய கொள்கைகளும் அதிக ஜனங்களுக்கு அதிக சுகம் கொடுக்க வேண்டுமென்ற மதமும், 'தக்கன தங்குவ' என்ற பிரமாணமும், ஆகிய இவையெல்லாம் சேர்ந்து, தினசரி நடவடிக்கைக்கு வேண்டியவான

பொருத்தமான தர்மயுக்திகளை விளக்கவில்லை. வெகுமுன்னரே, என்னுடைய கொள்கைகள் ஒருபுறம், என் நடவடிக்கை ஒருபுறமாய்க் கைவிட்டுப்பிரிந்து செல்லுவனவாயின. சில பழக்கங்களின் பழைய வாசனையும் திடீரென நடக்கும் நடத்தையும் கொண்டவனாய், தன் நடத்தைக்கு எப்போதும் காரணம் காட்டமுடியாத வெறும் பிராணியாய் விட்டேன். மொத்தத்தில், என் போன்ற மற்ற மனிதரில் சிலரைக்காட்டிலும் நான் அதிகம் அன்புவாய்ந்த கணவனாகவும், பிரியம் பாராட்டும் பிதாவாகவும், தளராத நண்பனாகவும், மேலான நல்லொழுக்க முடையவனாகவும் இருந்தேன் என்றால், அதற்குக் காரணம், அதிகம் இளகியமனதும் தயையும் எனக்கிருந்ததால் இருக்கலாமே தவிர என்னுடைய பரமயோக்கியமான கொள்கைகளும் தீர்மான அபிப்பிராயங்களுமல்ல. என் யௌவனக் கனாக்களின் மேலான நோக்கங்களை உத்தேசித்து, நரகத்தில் வீழ்ந்த "சாத்தான்" உடனும் "பீல்ஸிபப்" உடனும் என்னை வாஸ்தவமாக ஒப்பிடலாம்; ஒருவேளை அவர்களிலும் நான் இழிந்தவன் என்றே கூறவேண்டும். ஏனெனில், என்னுடைய ஹீனஸ்திதியின் தாழ்மையை முற்றுமுணராமலும், இந்தத் தாழ்ந்த நிலைமையில் இருக்க மனம்பொறாது, முயற்சிக்காமலும், சற்றும் உணர்ச்சியற்று, திருப்தனாய் இருக்கின்றேனல்லவா?

எப்பொழுதுமே, எனக்குப் புஸ்தகங்கள் என்றால் அதிகப்பிரியம். "ரெயினால்ட்ஸைக் கூடாதென்று கைவிட்டதும், "ஸ்காட்" "தாகரே" "டிக்கன்ஸ்" "ஜார்ஜ் இலியட்" என்பவரைக் கைக்கொண்டேன். "கார்லைல்" உடைய "ஸார்டார் ரிஸார்டஸ்" என்ற புஸ்தகமும், "எட்வின் ஆர்னால்ட்" உடைய "ஆசிய ஞாயிறு" என்ற புஸ்தகமும் ஆரம்பமுதல் கொண்டு நான் மிகவும் பிரியமாய்ப் பாராட்டி வந்த புஸ்தகங்

கள். பதவியும் அதிகாரமும் பூண்கின்ற வெளிவேஷங்களைப் பிடுங்கி யெறிந்து, அவைகளின் உண்மை யான ஸ்வரூபத்தை விளக்கி, இயற்கை யுணர்ச்சி ஒன்று இவ்வுலகு முழுமையையும் ஒன்றோடொன்று உறவாக்குவதையும் அந்தக் "கார்லைல்" தான் எனக்குத் தெரிவித்தார். சகல கௌரவத்தாலும் மாட்சிமை தங்கும் ராஜாதிகாரத்தின் மஹிமை மரியாதைகளாலும் சூழப்பெற்று சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் சக்ரவர்த்தி, அந்த ஸ்தானத்தால் மட்டுமே இழிகுலத்திற் பிறந்து தெருக்கள் பெருக்கும் தோட்டியினும் எவ்விதத்திலும மேலோனாகமாட்டான். பதவி யென்பது மேலிடப்படும் முத்திரையே. அந்த முத்திரையை வகிக்கும் மனிதனல்லவா, நாணயத்தின் உண்மையான மதிப்பை நிர்ணயிக்கும் தங்க மென்று சொல்லவேண்டும். மற்ற புஸ்தகமோ இவ்வரிய பெரிய உண்மையை மேற்கொண்டு, இவ்வுலகத்தில் நிஜசுகம் பெறுவதற்கான ஆத்மத்தியாக மென்கிற தெய்வீக வழியை நன்கு விளக்கிற்று. நமக்கு ஆனந்தத்தை அளிப்பது பணமல்ல, உயர்ந்த பதவியல்ல, அதிகாரமல்ல, மற்றொன்றுமல்ல! பூத தயையும் மனதாரக் கொடுக்கும் தியாகமுமே; மற்றவைகளெல்லாம் வெறும் இடையூறுகளே! பிறர் பொருட்டு அவைகளைத் தியாகம் செய்யும்போது மட்டுமே அவை நமக்கு இன்பம் விளைப்பன. என்ற இந்த உண்மை, அந்தச் சிறந்த காவியத்தை ஒவ்வொரு முறையும் வாசிக்கும் போதும் முன்னிலும் அதிக ஆழமாய் என் மனத்தில் பதிந்தது. வரவர நான் வாழும் வாழ்க்கையிலுள்ள மன அமைதி குறைந்தது. பிறர்க்குதவ வேண்டுமென்ற இந்த அவாவால், நான் அடிக்கடி மனம் நொந்து யோசனையில் மூழ்கிப் பித்துப் பிடித்தவன் போலிருப்பேன். சிலவேளைகளில் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. என் லௌகிக அபிப்பிராயங்கள் எல்லாம் இதனால் அதிகம்

குலைக்கப்பட்டு, காந்தி குன்றி, எனக்கு அருவருப்பைத் தந்தன. அவைகள் குற்றம் குறையற்றன என்ற என் மதம் போய், பரம சந்தேகங்கள் உதித்து, என் மனத்தை பயப் படுத்தின. இப்படியாக லௌகிய மதத்தில் எனக்கிருந்த தீவர மான நம்பிக்கை அதி சீக்கிரத்தில் தளர்ந்து போயிற்று.

இத்தருவாயில், "ராபெர்ட் எல்ஸ்மியர்" என்ற புஸ் தகத்தை ஒரு புஸ்தகக் கடையில் வாய்க்கினிய அதின் பெயரால் தூண்டப்பட்டு விலை கொடுத்து வாங்கினேன். முதற் சில பக்கங்கள் ஒரு வாறு ருசிக்க வில்லை என்றாலும் செல்லச் செல்ல அந்தப் புஸ்தகத்தைப்படிப்பதில் ஆழ் ந்து, ஓர் இரவிலேயே ஒரே மூச்சாய் அதைப்படித்து முடித்ததை மறக்க வில்லை. பிறகு திரும்பத்திரும்ப அதை வாசித்தேன். அதில் கூறியுள்ள சிறந்த அபிப்பிராயங்களைப் பற்றி ஆழயோசித்தேன். நான் வாழ்ந்த வாழ்க்கை மீது அதிகம் அதிருப்தி யடைந்து, பாழான சம்சயங்களிலும் பரமசந்தேகத்திலுமாய் விலைமதிக்கக் கூடாத பல ஆண்டு களை வீணே செலவிட்டேனே என்று மிகவும் மனம் நொந்து வருந்தினேன். அந்தப் புஸ்தகத்தின் கதா நாயகனை என் னுடைய வீரனென்றும் உலகசம்மதமான மதாசாரப்பிரகாரம் தெய்வசந்தேகி என்று தான் சொல்லக் கூடுமென்றாலும், அவன் இருதயம் சிறந்த அபிப்பிராயங்களாலும் பூத தயை யாலும் நிரம்பியிருந்தது. அவன் மனதோ ஊக்கத்திலும் பலத்திலும் இடதைரியத்திலும் சற்றும் குறைவற்று இருந் தது. எல்லாவற்றிற்கும் மேலாக, அறிவினும் நற் செய் கைகளினும் பலத்திலும் பிரயோசனத்திலும் அவனுக்கு 'பிரமாதமான' நம்பிக்கை யுண்டு. நானோ உலகவாழ்க்கையை முற்றும் வேறுவிதமாய்க் கருதியவன்; மதக்கோட்பாடுகள் நம்பிக்கைகள் இவைகளை யெல்லாம் நம்பாமல் சந்தேகப்படுவ

தோடு நிற்காமல், 'நீதி நியாயங்களுக்கு ஆதாரமாகவிருக்கும்' தரும உணர்ச்சியிலேயே சந்தேகங் கொண்டவன். என் சந்தேகத்திற்கு இரையாகாதவை கிடையா. ஆகவே, இந்தப் புஸ்தகத்தில் விவரமாய் வருணிக்கப்பட்ட கதா நாயகனது சிறந்த வாழ்வு என் உத்சாகத்தைக் கவர்ந்து, அதைப் போன்ற சிலாக்கியமான வாழ்க்கை வாழவேண்டு மென்று ஒரு மாதிரியாய் என் மனத்தைத் திருப்பிற்று. அதோடுமட்டுமல்ல; இதனாலேயே இப்பெரும் நன்மையும் உண்டாயிற்று; அதாவது, பூரண மனத்துடன் நான் கொண்ட நம்பிக்கைக்கும் தீர்மானங்களுக்கும் நேர்விரோதமாய் அசம்பந்தமாய்ப் பிரதிதினம் நடந்து வந்த மோசமான இந்த வாழ்க்கையை மேற்கொண்டு அனுசரிக்க முடியாமற் செய்தது. அப்படிவாழும் வாழ்க்கையை இனிச் சற்றும் சகிக்கமுடியாது என்று உணர்ந்ததும், நான் என் கச்சேரியைத் தற்காலத்திற்கு அடைத்து விட்டதாய் என்னுடைய கேஸ்களை வேறொரு வக்கீலிடம் கொடுத்து விட்டு, என் குடும்பத்தாரையும் ஊருக்கு அனுப்பி விட்டு, இந்த விஷயத்தைப் பற்றிச் சாவகாசமாய் யோசித்துத் தீர்மானம் பண்ணவேண்டு மென்று தன்னம் தனிமையாய் யாத்திரை புறப்பட்டேன்.

கூட்டுறவு மளிகை *

The Co-operative Store

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில்
தலைத் தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமான் ஊ. சா. வெங்கடராம ஐயர் எழுதியது.

(சாமான் வாங்குவதால் உண்டாகும் பொது நன்மைகளும், வாங்குவோர் கைக்கொள்ள வேண்டியனவும்.)

கூட்டுறவு மளிகையின் உயர்வையும் அவசியத்தையும் பற்றி நேசனது நேயர்கள் முன்னம் நன்கு அறிந்திருக்கிறார்கள். ஆதலின், அதுபற்றி வேறு சிலவற்றை ஈண்டுக் கூறுவது பொருத்தமானது.

சாமான்களை விலைக்கு வாங்கும்போது 'பிறர்க்கும் அதனால் நன்மை யுண்டாகும்' என்று நாம்,—பொது ஜனங்கள் எவரும், இதுவரை நம்பியதில்லை. 'அப்படி வாங்குவதனால் பலநன்மைகள் உண்டாகும்' என்று அறிவது பரோபகாரசிந்தை உள்ளவர்களுக்கு மிக அவசியமானது. பொதுவாக ஜனங்களுடைய முன்னேற்றத்திற்கு இஃது ஒரு சிறந்த வழியாகும்.

கூட்டுறவு மளிகையிலே வேண்டிய சாமான்களை வாங்குவது, எல்லாருக்கும் உதவி செய்வதோடு தரித்திரம் என்னும் பிணியை ஓரிடத்திலும் தங்கவிடாமல் ஓட்டுதற்குத் தகுதியான பல ஸ்தாபனங்களையும் உண்டாக்கும். இப்படி வாங்குவதில் எவர்க்கும் (தாம் வாங்கும் சாமான்களுக்குரிய

---

* இது 'Co-operation; The hope of the Consumer' என்ற தலைப்பின்கீழ் கும்பகோணம்-கூட்டுறவுப் பிரசாரிணையார் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தின் கருத்தைத் தழுவி எழுதப்பட்டது.

விலையைக் கொடுப்பதன்றி வேறு) எவ்வித கைப்பொருளும் நஷ்டமாவதில்லை; ஆனால் வாங்குவோருக்குப்பொருள் மிகுதியாதல் கூடும். அங்ஙனம் வாங்குவோர் தமக்கு உதவி செய்துகொள்வதிலேயே பிறருக்கும் உதவி செய்தவராகின்றார். இதுவரையிலும் 'பயனற்றது' என்று கருதி வந்த ஒரு சிறிய வியாபாரத்திலும் இத்தகைய புதிய குணத்தைக் காண்பது சிறிது ஆலோசனை செய்பவர்களுக்கும் எளிதாகும்.

கூட்டுறவு மளிகைகளை இத்தகைய மேலானவை என்று கருதுவது முதல் முதல் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய முதன்மையான குணமாகும். அதிற் சேர்ந்தவர் எவரும் சுயநலத்தைக் கருதுபவராக இருத்தல்கூடாது. மற்று எங்ஙனம் கருதுபவ ராதல் வேண்டுமெனில், இதிற் சேர்ந்திருப்பதனால் நாம் நமக்கும் உதவி செய்துகொண்டு நம்மை அல்லாத பிறர்க்கும் உதவி செய்ய முடியும்; அன்றியும் நியாயம், பரஸ்பர உபகாரம், மேன்மை, தன் மதிப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பலஸ்தாபனங்களை உண்டாக்குவதும் ஆகும், எனக் கருதுவோராதல் வேண்டும் என்க.

மேற்கண்ட விஷயங்களைச் சற்று விவேகத்துடன் அறிந்து கொள்ளும் சாமான் வாங்குவோர், ஏதேனும் ஒரு கூட்டுறவு மளிகையிலேயே தமக்கு வேண்டிய சாமான்களை லாபநஷ்டம் கருதாமல் வாங்கிவருவார் என்பதும், அதனை விட்டுப் பிறதனித்த மனிதர்கள் சுயலாபங் கருதிவைத்திருக்கும் கடைகளிலே தமக்குவேண்டிய சாமான்களை வாங்கவேமாட்டார் என்பதும் ஒருதலை.

இனி, பிறமனிதர்கள் வைத்தகடைகளிலே சாமான்களை வாங்குவது மேற்பார்வைக்கு லாபம்போற் காட்டுவதுடன் சில தற்கால அனுகூலங்களையுங் காட்டலாம். சிறிது உற்று

நோக்கில் அக்கடைகளில் வாங்குவதால் விளையும் பலதிறப் பட்ட தீமைகளையும் சாமானியர்களும் எளிதில் அறிந்து கொள்ளுதல் கூடும்.

ஐக்கியவாதிகள் கூட்டுறவு மளிகைகளிலேயே தங்களுக்கு வேண்டியவற்றை வாங்கிவருவதும், பிறரையும் வாங்குமாறு தூண்டிவருவதும் மேல் நோக்காகத் தோன்றும் அத்தகைய அற்ப அனுகூலங்களைக் கருதியல்ல. ஆனால், சுயலாபத்தையே கருதித்தனித்த மனிதர்களாற் செய்யப்படும் வியாபாரக் கடைகளில் வாங்குவதால் விளையும் குறைபாடுகளையும்; கூட்டுறவு மளிகைகளில் வாங்கி வருவதால் உண்டாகும் நியாயம், பரோபகாரம், தன்னல மறுப்பு, தம்மை அறியாது துன்பமின்றிப் பொருள் மிகுதல் ஆகிய உயரிய பயன்களையும் அறிந்ததால் என்க.

கூட்டுறவு மளிகைகளிடத்தில் அபிமானம் வைத்தல் என்றால், அதற்கு 'ஒருவன் தன்னுடைய கொள்கைகளிடத்திலும், தனது மனச்சாட்சியிடத்திலும், தன்னுடைய நண்பர்களிடத்திலும் நம்பிக்கைவைத்தல்' என்பது பொருளாகும்.

கூட்டுறவு மளிகைகளை ஸ்தாபிப்பவர்கள் தங்களுடைய கடமைகளை நன்றாய் அறிந்தவர்களேயன்றி அதனைமறந்து சுயநலத்தை நாடுகின்றவர்களல்லர். அதனால் இத்தகைய கூட்டுறவு மளிகைகளிற் சேருகின்றவர்கள் பிறகடைகளில் வியாபாரம் செய்வதிலிருக்கும் கெடுதல்களைக் கண்டு பிடிப்பதுடன் அவற்றிற்கு ஒரு பரிகாரம் உண்டு என்பதையும் கண்டு பிடித்துக் கூட்டுறவு முறையில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். இதனால், நாம் கடைக்காரர்களிடத்தில் வெறுப்பை உண்டாக்குவதாக எவரும் கருத்துக் கொள்ளலாகாது

அவர்களிடத்தில் நமக்கு எத்தகைய வெறுப்பு மில்லை; அதிருப்தியு மில்லை. ஆனல் அந்த வியாபாரத்தின் முறை பிசகானது என்பதும், அதனல் சாமான் வாங்குகின்றவர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் எத்தகைய நன்மையையும் உண்டாக்க முடியாது என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

கூட்டுறவு மளிகையில் நடைபெறும் முறை நியாயமான பல உயர்ந்த கொள்கைகளை அஸ்திபாரமாகக் கொண்டது; அஃது எல்லாருக்கும் தெளிவாக விளங்கக் கூடியது; எவரும் அதனை நம்பலாம்; அதைச் சரியாக உபயோகபபடுத்திவந்தால் 'ஐக்கியத்தினல் வரக்கூடியன' என்று பொது ஜனங்கள் நம்பும் எல்லா நன்மைகளும் தவருது வந்தடையும். ஆனல் 'ஓரிரவிலேயே எல்லோரும் பணக்காரர்களாகத் தக்க கண்கட்டு வித்தை அல்ல' என்பது அறியத் தக்கது.

பலர் சேர்ந்து சாமான்களை வாங்குவதில் மிகமேலான வும், சிறிதும் துன்ப மின்றிப் பொருளை மிகுத்துத் தரத்தக் கனவுமாகிய பல நோக்கங்கள் உதிக்கின்றன. அநத நோக்கங்களை, உண்மையாயும் சுறு சுறுப்பாயும் நமது கோட்பாடுகளை நாம் வியாபார முறையிலே பிரயோகம் செய்வதால் தான் அடையமுடியும். கூட்டுறவு முறையிலே பொது ஜனங்கள் ஒன்று கூடிச் செய்யும் 'பொது ஜனவியாபாரமாகிய கூட்டுறவு மளிகை' என்பது குடியரசு போன்ற பெருத்த ஒரு காரிய மாகும். ஆனல் அதிற் பயனடையக் காலமும் விடாமுயிற்சியும் வேண்டும்.

'எழுமின் மாந்தர்காள் எழுமின் எழுமின்
உழைமின் உழைமின் ஓயாது உழைமின்
பெறுமின் சுதந்தரம் பெறுமின் பெறுமினே'

கனவு காண்பது ஏன்?

Why do we dream

ஸ்ரீமான் V. நாராயண ஐயர், M. A., M. L., எழுதியது.

நாம் உறங்கும்போது மூளையின் பெரும்பாகம் அயர்வுற்றிருக்கும் எனினும் சிற்சில பாகங்கள் வேலைசெய்கின்றன. நமக்கு ஏற்படும் உணர்ச்சிகளின் வடுக்கள் தங்கும் அணுக்கூடுகள் பல சேர்ந்தது தான் மூளை. அவ்வுணர்ச்சிவடுக்கள் ஒன்றோடொன்று சம்பந்தப் பட்டிருப்பவை. ஆகவே அவற்றுள் ஒன்றை மறுபடி நம் மனதைச் செலுத்தி ஞாபகத்திற்குக் கொண்டுவரும்போது மறுபடி பிரதிபலிக்கும் அந்தப் பழைய உணர்ச்சியோடு சம்பந்தப்பட்ட மற்ற உணர்ச்சிகளும் சேரப் பிறக்க, அவைகளைப் பகுத்தறிவுகொண்டு ஒழுங்குபடுத்தி, வேண்டும் உணர்ச்சிகளை மட்டும் மனவலிவு கொண்டு கிளப்புவதுதான் அறிவு. அந்த அறிவின் மேற்பார்வையற்று ஒழுங்கின்றிச் சிதறுண்டு கிளம்பும் உணர்ச்சித் தொடர்களை உடையவரை அறிவற்றவர் என்றும் சொல்லுகிறோம். நாம் தூங்கும்போது இவ்விதம் மேற்பார்க்கும் நமது சக்தியும் உறங்குகின்றது. அதே தருணத்தில் உணர்ச்சி வடுக்களும் பெரும்பாலும் அயர்ந்திருப்பினும் சிலமட்டும் அயராமல் அவையுடன் சேர்க்கை வாசனை கொண்ட மற்ற உணர்ச்சிகளையும் எழுப்புகின்றன. விவேகம் என்ற பகுத்தறிவு இல்லாதிருக்கவே, இவ்வுணர்ச்சிகள் ஒழுங்குபடாமல் அசம்பந்தமாகத் தோன்றுகின்றன

இவைகளின் பலம் குறைந்திருந்தால் அதற்கேற்பக் கனைக் களும் பலம் குன்றவே கண்விழித்ததும் அவைகளின் சுய ரூபத்தையே மறந்துவிடுகிறோம்.

கனவற்ற உறக்கம் உண்டா? இதற்குப் பல சாஸ்திரிகள் பல விதம் பதிலளிக்கின்றனர். சிலர் கனவற்ற தூக்கமே கிடையாது. ஆனால் ஆழ்ந்த தூக்கத்தில் நாம் காணும் கனவுகள் ஞாபகத்தில் நிற்பதில்லை. விழிக்கு முன் மறந்து விடுகின்றோம் என்கின்றனர். வேறு சிலர் கனவு என்பது தூக்கத்தில் கிடையாது. நாம் விழிக்குமுன் நமது தூக்கத் தைக் குலைக்கும் காரணங்களால் வெகு காலம் கொண்ட தெனத்தோன்றும் நீண்ட கனவுகளும் கூட ஒரு விநாடிப் பொழுதில் தோன்றி மறைகின்றன. அதாவது கனவு என் பது தூக்கத்திற்கும் விழிப்பதற்கும் மத்தியிலுள்ள விநாடிப் பொழுதில் தான் என்று சொல்லுகிறார்கள் அதற்கு உதா ரணமாக, நாம் கனவிற்கேட்கும் ஒலிகளுக்கும் அவ்வொலி கேட்டதும் கண் விழிக்க உடனே காதிற்படும் ஒலிகளுக் கும் ஒற்றுமை இருக்கின்றது என்று எடுத்துக்காட்டு கின்றனர். இவ்வித ஒலி காதிற் பட்ட பின்தான் கனவு உண்டாயிற்றென்றும் கனவில் அதை யொத்த ஒலி கேட் டதும் விழித்துக்கொள்ளுகிறோ மென்றும் இவர்கள் சொல் லுகிறார்கள். இது யெப்படி யிருப்பினும் கனவு காண்பதில் கெடுதல் இல்லை யென்றும்,இளம் வயது,தேக ஆரோக்கியம், மூளைபலம் முதலியவற்றை உடையவர்களே அதிகம் கனவு காண்கிறார்கள் என்றும், முற்றும் கனவற்றிருப்பவர் பிறவி மூடரும் பைத்தியம் பிடித்தவரும் அசடரும் கொலைபாத கருமே என்றும் ஒரு சாஸ்திரி கூறியுள்ளதை நினைத்து நாம் கனவற்ற உறக்கத்தின் சுகம் பெறுவிடின் நம்மைத் தேற்றிக்கொள்ளலாம்.

கனவில் நமது விவேகம் அழிந்திருப்பதால் இயற்கை விரோதமான எவ்வித அற்புதங்களால் இந்த உணர்ச்சித் தொடர்கள் ஏற்பட்டாலும் அப்பொழுது அவை நமக்கு ஆச்சரியம் விளைப்பதில்லை. இதற்கு இது காரணம் என்ற உணர்ச்சி கிடையாது. காலம், இடம் என்ற இருவித உணர்ச்சி மட்டுமே அப்போதிருக்கின்றது. ஆனால் விழித்துக் கொண்டதும் அவைகளைப்பற்றி நினைத்தால் சிலவேளை பயமும் சில வேளை ஆச்சரியமும் விநோதமும் உண்டாகின்றன. இந்தக் கனுக்களுக்கு அர்த்தம் உண்டா? அவைபின்வருபனவற்றைக் குறிக்கின்றனவா? நல்ல கனு கெட்ட கனு என்று உண்டா? என்று சந்தேகிக்கிறோம். ஒரு வகைக் கனுக்கள் நம்முடைய தேகஸ்திதியைப்பற்றி அதாவது நரம்புகளிலும் உணர்ச்சியிலும் நமக்குள்ள நோய்களைப்பற்றி நமக்கு முன் அறிக்கை செய்கின்றன என்பதைத் தவிரக் கனுக்களுக்கு வேறு அர்த்தம் ஒன்று மில்லை என்றும் அவற்றைக்கொண்டு மேல்வரும் நன்மை தீமைகளை அறியமுடியாதென்றும் சாஸ்திர ஆராய்ச்சி செய்தவர் கூறுகின்றனர். பின்வரும் விஷயங்களை விளக்குவனவாகத் தோன்றும் கனுக்களை ஆராய்ந்தால், அவற்றில் சில கனுக்கள் பலிப்பதற்குக் காரணங்கள் தோன்றுமென்று அவர்கள் எடுத்துகாட்டுகிறார்கள். நாம் விழித்திருக்கும்போது உண்டாகும் சம்பவங்கள் எல்லாம் நமது ஞாபகத்தில் பதிவதில்லை. ஆனாலும் அவ்வுணர்ச்சிகள் மூளையில் பதிகின்றன. நாம் என்ன நினைத்துப்பார்த்தாலும் நம்முடைய விவேகத்தைக் கொண்டு அவ்வுணர்ச்சிகளை மற்ற உணர்ச்சிகளோடு சம்பந்தப்படுத்தாததால் அவை நினைவிற்கு வருவதில்லை. ஆனால் நாம் உறங்கும்போது அந்த உணர்ச்சிகள் உண்டான சமயத்தில் ஏற்பட்ட மற்ற உணர்ச்சிகளுடன் அவைகளும் மேல் கிளம்புகின்றன. இவ்விதம் நாம் விழித்

திருக்கும்போது கவனிக்காததால் பின் அறிய முடியாத பல செய்திகள், கனவுகளில் நமக்கு நன்கு புலப்படுகின்றன. சில சமயங்களில் நாம் அசம்பந்தமானவை என்று தள்ளிக் கவனியாதிருந்த உணர்ச்சிகள் ஒன்றை யொன்று பின் பற்றி நடந்த பிரகாரம் கனவிலும் பின் பற்றி வரவே அதினின்றும் வாஸ்தவம் விளங்குகின்றது. அநேகர் ஒரே காலத்தில் ஒரே இரவில் ஒரே மாதிரியான கனவு காண்பதற்குக் காரணம் இவ்விதம் ஊகித்துக் கூறலாம். புயற்காற்றாலோ வேறுவிதமாக இடிமுதலிய இயற்கைச் செயல்களாலோ அனைவரும் ஒருங்கே அவரவர் தூக்கத்தினின்றும் எழுப்பப்படுவதால் எல்லாருக்கும் ஒரே விதமான உணர்ச்சியும் அதற்கேற்ப ஒரே வகையான கனவுகளும் உண்டாகின்றன என்றும் சொல்லுகிறார்கள்.

கனவு "காண்பது" என்று சொல்லுவது ஏன் என்றால் கனவுகளில் பெரும்பாலும் நாம் காண்கின்றோமே யொழிய மற்ற உணர்ச்சிகளை அவ்வளவு அதிகம் பெறுவதில்லை. இது விஷயமாய் ஆராய்ச்சி செய்தவா நம்முடைய கனாக்களில் நூற்றுக்கு 84 கனாக்களை நாம் காணுவதாகவும்; கேட்பதாகவும் முகப்பதாகவும் தொடுவதாகவும் பேசுவதாகவும் இருக்கின்ற கனாக்கள் அவ்வளவு அதிகம் இல்லை என்றும் எடுத்துக் காட்டுகிறார்கள்.

கனவால் உபயோகம் உண்டா என்றால், உண்டு. சிலர் வாழும் வாழ்க்கையில் சுகப்படவில்லை என்றாலும் அவர்கள் நல்ல கனாக்கள் கண்டு அவைகளை நினைந்து களிப்படைகின்றனர். மேலும் ஒவ்வொருவருக்கும் விழிப்பு வேளைகளில் நற்தேர்ச்சியடையாத அம்சங்கள் சில உண்டு. அவ்வம்சங்கள் கனாக்களால் தேர்ச்சியடைகின்றன. அது கொண்டு நாம்

இருபுறமும் தேர்ச்சியடைந்தவராகின்றோம் என்றும் சாஸ்திரஞர் கூறுகின்றனர். நாம் தூங்கும்போது நாம் அதிகம் பாராட்டும் துயரங்களையும் ஸுகாநுபவங்களையும் முற்றும் மறக்கின்றோம். விழித்தவுடன்கூட அவைகள் சற்று யோசித்த பின்தான் நமது நினைவிற்கு வருகின்றன. நாம் தூங்காத காலத்து அதிகம் போற்றாத உணர்ச்சிகளே பெரும்பாலும் நம்முடைய கனவுகளில் ஆதிக்கியம் அடைகின்றன என்றும் நாம் ஓர் உணர்ச்சியிலேயே ஆழ்ந்து சீர்குலையாதிருக்கப் பல உணர்ச்சிகளையும் கொடுத்து காக்கின்றன நமது கனக்கள் என்றும் மானவஸினி அம்மை (Mde Manageine in "Sleep") உறக்கம் என்ற புஸ்தகத்தில் கூறியுள்ளாள்.

கிரேக்க நாட்டுக் கதைகள்
Stories from Greece

கிரேக்கரது தேவவம்சம்
The Greek Pantheon

இத் தேசத்தாரினது பண்டைக் கால கடவுடிக்கை நாக ரிக முதலியனவற்றையும், அவர் தழுவிய கொள்கைகளையும், நமக்குத் தெரிவிப்பவை இவரது சிற்சில ஆதிக்கிரந்தங்களே யாவன. அவற்றுள் ஹீஸியட் என்னும் கிரந்தத்திலும் ஹோ மரின் காப்பியங்களிலும் பிரபஞ்சத்தைப் பற்றிய புராதன மான கிரேக்க கொள்கைகளிற் சிலவற்றைக் காணலாகும்.

ஆதியிலுள்ளது யாவும் அடங்கிய சொரூபமற்ற சமஷ் டியே. பிறகு காதலானது இதைக் கலக்கமுறச் செய்து, இதனின்றும் பல சொரூபங்களை உண்டாக்கிற்று. முதலில் இரவும் அதனின்று பகலும் உதித்தன, முதன் முதலில் சிருஷ்டிக்கப்பட்ட பூமியிலிருந்து கடல் மலைகளும், பிறகு ஆகாயமும் உண்டாயின. "யூரனஸ்" என்னும் இவ் வான தேவன், தன் தாயாகிய பூமியின் மற்றொரு சொரூபமாகிய "ஜீ" என்பாளை மணந்தான். அவள் "டைடன்" களையும் "ஸைக்ளாப்ஸ்" களையும், இவர் போன்ற வேறு ராக்ஷசர்களை யும் பெற்றாள். யூரனஸ் அன்புடன் தன் மக்களை ஆதரித்து வளர்க்காமல், அவர் யாவரையும் வெறுத்துப் பகைத்து இருண்டதொரு குகையினுள் அவரைச் சிறையிட்டான். தம் மக்களின் துன்பத்தை ஆற்றொணாது மனமுருகிய ஜீ என்பாள், கொடுமையை இயற்றும் கன்மனத்தினனை தன் கணவனை வெறுத்து எவ்வாறாயினும் தன் மக்களை விடு விக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டாள், தன் கணவ னாகிய தேவனுடன் நேர் நின்று எதிர்த்துப போர்புரிவது மிகவன்மை பொருந்திய வீரர்க்கும் எளிதல்ல, வலியற்ற பெண்பாலாகிய இவள் என்ன செய்வாள். சதியாலோசனைகள் செய்து வெல்வதே சரியென நினைந்து சூழ்ச்சிகள் பல செய் தாள். எவ்வாறோ தன் மக்களுடன் கலந்து பேசினாள்.

இவற்றின் பயனாக அவனுடைய கடைசிப் புத்திரனான க்ரோனஸ் (சனி) என்பான் கூரியதோர் அரிவாளைக் கையிலேந்தித் தன் தகப்பனை எதிர்த்துச் சண்டையிட்டு அவனைக் கண்டதுண்டமாக்கினான்.

அரசன் தொலைந்ததும் தானே அரசாள வேண்டு மென்றதுர எண்ணங் கொண்ட க்ரோனஸ் சிறையில் அடை பட்டிருந்த தன் அண்ணன்மாரகளை விடுவிக்காமல் தனக்கே முடிசூட்டிக்கொண்டான். பிறகு பழிபாவத்துக் கஞ்சாது தன் சகோதரியாகிய "ரியா" வென்பாளை மணம் செய்து கொண்டான். இத் தருணத்தில் "நீ உன் தகப்பனை இராஜ்ஜியத்தினின்று நீக்கியதுபோல் உன் குழந்தை யொன்று உனக்குத் துரோகம் செய்து, உன்னைச் சிங்காதனத்தின் றும் நீக்கும்" என்ற சாபத்தைப் பெற்றான். இதைக் கேட்டுக் கடுங்கோபங் கொண்டான். யாவர்க்கும் பிறவுயிரினும் தம்முயிர இனிது அல்லவோ? எவ்வாறாயினும் விதியை மதியால் வெல்லக்கூடுமென நினைத்து, எங்ஙனம் இதைத் தடுப்பதெனக் கவலை கொண்டான். திடீரென ஒரு கொடிய எண்ணம் அவன் கன்மனத்திலுதித்தது. "குழந்தைகள் உயிருடனிருந்து வாழ்ந்தாலல்லவோ அவை பருவம் வந்ததும் நம்மை எதிர்த்துக் கொல்லக்கூடும். அவை பிழைத்திராவிட்டாலோ—." தனக்குப் பிறந்த ஒவ்வொரு குழந்தையையும் அது பிறந்த மாத்திரத்திலேயே விழுங்கி விடுவதெனத் தீர்மானித்தான். இப்படி அவனுக்கு ஆறு குழந்தைகள் பிறந்து அவனுக்கே இரையாயின. கணவன் மேல் எவ்வளவு பிரியமிருப்பினும் தன் சேய்க்கு இரங்காத தாயு முண்டோ? குழந்தைகள் கொலையுறுவதைக் கண்டு பொறுக்காத ரீயா வானவள் தன்னுள் எழும் மாதுரு வாஞ்சையைச் செலுத்துதற்கு ஒரு சிசுவையாவது கொலையுறாமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டு மென்று தீர்மானித்தாள். அவள் ஏழா முறை சூலுற்றுப் பிரசவித்தவுடன் அக் குழந்தையை வெகு இரகசியமாய் வெளிக் கடத்திவிட்டு, குழந்தைத் துணியில் ஒரு கற்குழவியைச் சுருட்டிவைத்திருந்தாள். சிசுகாதகனை அப் பாவி வந்ததும் "இந்தா இக் குழந்தையை விழுங்கு" என்று அந்தக் கல் மூட்டையை

எடுத்துக் கொடுத்தாள். துணியோடு அந்தக் கற் குழவியை படக்கென்று விழுங்கி ஏப்பமிட்டு ஏமார்ந்திருந்தான் அக்கொடியோன். வெளி யேற்றப்பட்ட அவ்வாண்மகவு க்ரீட் என்னும் தேசத்தில் ஒரு மலைச்சாரலிலிருந்த சிறு குகை யொன்றுள் இரகசியமாய்ச் சேர்க்கப்பட்டு வெகு பிரியத்துடனும், சாக்கிரதையாகவும் போஷிக்கப்பட்டு வந்தது. ஸியுஸ் என்னும் பெயரிடப்பட்ட இக்குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கம்பீரமான தோற்றமும், மிகுந்த புஜவலியும் பொருந்திய வாலிபனாகச் சிறந்து விளங்கிற்று. பிறகு வயது வந்ததும் இவன் க்ரோனஸை எதிர்த்து அவனை ராஜ்ஜியத்தைவிட்டுத் துரத்திச் சாப வார்த்தையை நிறைவேற்றினான். மேலும் விழுங்கப்பட்டு உயிர் நீத்த தன் சகோதர சகோதரிகளை உயிர்ப்பிக்கும்படி அவனை நிர்ப்பந்தித்துத் தாயின் மனத்தைக் களிக்கச் செய்தான். பின்பு சிறையிலடை பட்டுக் குற்றுயிராய் வருந்திய தன் பெரியப்பன்மார் யாவரையும் விடுவித்துக் களித்து மகிழ்ந்திருந்தான்.

நற்குணமற்றது இத் தேவ வமிசம். துர் எண்ணமும், அவநம்பிக்கையும், அளவற்ற பேராசையும் இங்குக் குடிகொண்டிருந்தன. நன்றி கெட்ட டைடன்கள் தம்மை விடுவித்த ஸியுஸ்விடம் பொறாமை கொண்டு அவனுக்குத் தீங்கிழைக்க எண்ணி க்ரோனஸ்ஸை மறுபடியும் அரசனாக்குவது தம் கடமையெனக் கூறினர் காப்பாற்றிய கையைத் தீண்டும் கொடிய அரவத்தை யொத்த இவர் க்ரோனஸ்ஸை அரசனாக்க வேண்டுமென்ற வியாஜத்தை வைத்துக் கொண்டு கலகம் விளைத்தனர். ஸியுஸ் கக்ஷியைச் சேர்ந்த தேவர்களுக்கும் டைடன்களுக்கும் மும்முரமான சண்டை நடந்தது. தெஸ்ஸலி தேசத்து மலைகளிடையில் நடந்த இக் கோரயுத்தம் நீடித்தகாலம் நிகழ்ந்தது. இதனிடையில் டைடன்கள் மலைகளை ஒன்றின் மேலொன்றாக அடுக்கி ஒலிம்பஸ் என்னும் தேவலோகத்தை எட்ட முயன்றாரெனினும் ஸியுஸ் தன்னுடைய வஜ்ஜிராயுதத்தால் அவர்களை மீண்டும் மீண்டும் தாக்கி வீழ்த்தினான். ஸைக்லாப்ஸ்களும், நூறு கைகளையுடைய ப்ரையர்யுஸ்ஸும் ஸியுஸ்ஸுக்குத் துணை நின்றனர். இவர்கள் உதவியைப்பெற்ற ஸியுஸ் கடைசியில் எதிரிகளை வென்று தேவர்களுக்கு அரசனாக முடி சூட்டிக் கொண்டான்.